# ஆத்மா

2018



இந்து மன்றம்

புனித சில்வெஸ்ரர் கல்லூரி ~ கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Dealers in Gunny Bags, Empty Bottles & Scrap metals**

**No, 237, Colombo Street, Kandy**

**Tele : 081 7926842**

**Mob: 077 4335 408**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE HINDU SOCIETY
## of
## St. Sylvester's College, Kandy

*cordially invites*

*Rev./ Mr./ Mrs. ..............................*

*for the*

**VAANI VIZHA '18**

*Chief Guest*

**Mr. M. Sunddareson**

*Director*

*Empeo Lands (Pvt) Ltd.*

*Richkid Edition (Pvt) Ltd.,*

*Special Guest*

**Mr. M. Sundaramoorthy**

*Treasurer*

*Kandy Education and Cultural Development Organization*

*on the*

*18th of October 2018*

*From 9.30 a.m onwards*

*At*

*College Auditorium*

**- Hindu Society**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிநிரல்

01. அதிதிகளை வரவேற்றல்

02. பூஜை நிகழ்வு

03. வரவேற்புரை - இந்துமன்ற மாணவத் தலைவர்

04. கணினி வரைகலை

05. நடனம் - சிவநர்த்தனம் (தரம் 6-9)

06. பஜனை - தரம் 1 - 5

07. பரிசளிப்பு - தரம் 1 - 5

08. கோலாட்டம்

09. பஜனை - தரம் 10,11,12

10. பரிசளிப்பு - தரம் 6 - 9

11. அதிபர் உரை

12. பொம்மலாட்டம்

13. வில்லுப்பாட்டு - தரம் 12,13

14. பரிசளிப்பு - தரம் 10,11,12,13

15. பிரதம அதிதி உரை

16. இதழ் வெளியீடு –"ஆத்மா"

17. நினைவுச் சின்னம் வழங்கல்

18. நாடகம் - தரம் 9,10,11,12

19. நடனம் - தரம் 12,13

20. நன்றியுரை - இந்து மன்ற மாணவச் செயலாளர்

21. தேசியகீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Vani Vizha Greeting Message from the Principal

I am indeed honoured and privileged to receive the blessings of the Hindu Goddesses Durga, Lakshmi and Saraswathi on our hallowed institution specially during the Navarathri festival that takes place from October 9th – 19th, 2018 . Also I extend my blessings and greetings on our Hindu brethren of the college who toil hard to make this sacred celebration most colourful and meaningful.

The word Navarathri means nine auspicious nights and they symbolize the three avatars of the Devi in the forms of Durga, Lakshmi and Saraswathi who bestow courage, prosperity, knowledge and grant victory.

St.Sylvester's college is a secular institution even though the majority is Buddhists. Hence each religion is given a prominent place at college and the societies belong to each religion have their special events in the college calendar and this promotes peaceful coexistence a breathtaking experience.

May I take much pride in forwarding my message to the souvenir “Athma” to be published on the eve of the SaraswathyPooja which is ceremoniously conducted and wish all the Hindu teachers and students a graceful NavarathriVizha. May God bless in all your future endeavours.

Mr.P.G.S.Bandara
Principal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் பிரிவு தலைவர், பிரதி அதிபரின் ஆசிச் செய்தி

இந்துமாணவர் மன்றத்தின் வருடாந்த நிகழ்வான நவராத்திரி பூசையும் வாணிவிழாவும் அதன் மகுடமாக வெளிவரும் "ஆத்மா" சஞ்சிகை இம்முறையும் சிறப்புற மலர்ந்துள்ளதையிட்டு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலகின் மிகத் தொன்மையான சமயங்களுள் ஒன்றாக விளங்குவது இந்துசமயமாகும். இந்துசமயம் தனக்கென தனித்துவமான பண்புகளையும், கலாச்சாரத்தையும் கொண்டது. இதற்கு பாடசாலைகள் ஆற்றிவரும் பங்களிப்பு மகத்தானது. இம்முயற்சியில் கண்டி புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் இந்து மாணவர் மன்றமும் காத்திரமான பங்களிப்பினை நல்கி வருகின்றது.

இந்துமத அனுஷ்டானங்கள் பல உள்ளன. இவற்றை உரியமுறையில் கைக் கொள்வதன் மூலம் அதன் பயனைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு தெய்வங்களும் ஒவ்வொரு சக்தியின் வடிவங்களே மூல சக்தியாகிய சிவனும் பராசக்தியும் தமது அருளை ஏனைய தெய்வ உருவில் எமக்கு அருள் பாலிக்கின்றனர். அந்தவகையில் பராசக்தியானவள் மலைமகள், அலைமகள், கலைமகளாக முறையே துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி வடிவில் எமக்கு அருள் பாலிக்கின்றனர். அவர்களை நினைவு கூரும் வகையில் இந்துக்கள் நவராத்திரி விரதம் இருந்து அவர்களின் அருளைப் பெறுவர். நவராத்திரி என்பது ஒன்பது ராத்திரிகள், முதல் மூன்று நாட்கள் வீரத்திற்காக துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்திற்காக இலட்சுமியையும், இறுதி மூன்று நாட்கள் கல்விக்காக சரஸ்வதியையும் வழிபடுவர். பத்தாம் நாள் விஜய தசமி அன்று ஆயத பூசையையும் ஏடு தொடக்கத்தையும் மேற் கொள்வர்.

இம்முறையும் மன்றத்தினர் இணைப்பாட விதான செயற்பாடாக வாணி விழாவை சிறப்பாக நடாத்துவதற்கு அதிபர், நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் பூரண ஒத்துழைப்பை வழங்கியதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்நிகழ்வை சிறப்பாக நடாத்துவதன் மூலம் மாணவர்கள் அறிவு, திறன் மனப்பாங்கு, ஆளுமை விருத்தி போன்றவற்றை பெற்றுக் கொள்வார்கள் என நம்புகின்றேன்.

எமது பாடசாலை தமிழ்ப்பிரிவு மாணவர்கள் கல்விச் செயற்பாடு, இணைப்பாட விதான செயற்பாடுகளில் சிறந்த முறையில் பெற்று சிறந்த பெறுபேறுகளை பெற்று பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் நாட்டிற்கும் நல்ல பெயரை பெற்றுக் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

"வாழ்க இந்து மன்றம் வளர்க உங்கள் பணி"

திரு. அ. ராஜா ரஞ்ஜிற்
பிரதி அதிபர்
புனித சில்வெஸ்ரர் கல்லூரி
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம அதிதியின் வாழ்த்து

"ஆன்மீகம் ஒருவரை பூரண மனிதனாக உருவாக்குகின்றது."

புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் இந்து மன்றத்தின் "ஆத்மா" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கண்டி மாநகரில் கல்வியில் மட்டுமல்ல ஏனைய அனைத்து நடவடிக்கைகளிலும் எமது பாடசாலை தலை நிமிர்ந்து நிற்பதுடன் மாணவர்களை எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றியடைய செய்வதில் முன்னிலையில் நிற்கின்றது. மும்மொழியிலும் பல இனங்களையும் அரவணைத்து அன்றும் இன்றும் வெற்றிநடை போடும் இப்பாடசாலையின் பழைய மாணவர் என்று கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலையில் பல்வேறு விழாக்கள் நடைபெறுகின்றன,அதில் நவராத்திரி விழாவும் ஒன்று. இவ்விழாவில் வெளியிடப்படும் இம்மலரினூடாக மாணவர்களின் சமய சிந்தனை சிறக்கவும் எழுத்தாற்றல் மேம்படவும் வழியமைக்கப்பட்டிருக்கின்றது.

வீரம் , செல்வம் , கல்வியை தேடி வழிப்படும் இவ்வழிப்பாட்டு முறையானது பாடசாலையில் தொன்று தொட்டு சிறப்பாக கொண்டாடப் படுகிறது. இதனை மேலும் உரமூட்டும் வகையில் இம்மலர் வெளியீடு அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

திரு. M.சுந்தரேசன்
பணிப்பாளர்
RICHKIT EDITION (PVT)
LTD, EMPEO LANDS (PVT) LTD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறப்பு அதிதியின் வாழ்த்துச் செய்தி

எழில் கொஞ்சம் மத்திய மலைநாட்டின் தலைநகராம் கண்டி மாநகரின் அமைந்துள்ள புனித சில்வெஸ்டர் கல்லூரியின் பழைய மாணவரான எனக்கு "ஆத்மா" சிறப்புமலருக்கு ஆசிச்செய்தி வழங்க கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

இன நல்லுறவினையும் சகோதரத்துவ பண்பாட்டிடையும் ஐக்கிய உணர்வினையும் இக் கல்லூரி கொண்டு விளங்குகின்றது. அதற்கு பலமத மாணவர்கள் ஒற்றுமையாக இங்கு கல்வி பயில்வது சான்றாகும்.

இந்த கல்லூரியில் மாணவர்கள் மத்தியில் சமய பண்பாட்டு விழுமியங்கள் சிறப்பாக வளர்க்கப்பட்டு வருவது இந்த மாணவர்கள் செயற்பாடுகளின் மூலமான தெளிவாகின்றது.

முப்பெரும் தேவிகளின் சிறப்பம்சங்களை நவராத்திரி விழா உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றது. நவராத்திரியின் விழாவின் சிறப்புகளை இன்றைய இளைய சமுதாயம் தெரிந்து கொள்ளவேண்டும். தன்னுடைய வாழ்நாளில் இந்துசமய செயற்பாடுகளை எந்த விதமான தடைகளும் இல்லாமல் தொடர்ச்சியாக கடைபிடிக்க வேண்டும்.

இந் நவராத்திரி விழா சிறப்பாக அமைவதற்கும் இதை சிறப்பாக ஏற்பாடு செய்தவர்களுக்கும் முப்பெரும் தேவிகளின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டுமென் வாழ்த்துகின்றேன்

ஆ.சுந்தரமூர்த்தி
பொருளாளர்
கண்டி கல்வி கலை கலாசார
அபிவிருத்தி பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியர்களின் உள்ளத்திலிருந்து

உலக நாயகியாம் உமையம்மைக்கு தனியாக விழா எடுக்கும் காலம் என நவராத்திரி விரத காலத்தில் அவளது அருளைப் போற்றி புகழ்ந்து நலம் பெறும் பொருட்டு பாடசாலையில் வருடந்தோறும் வாணி விழாவை சிறப்பாக கொண்டாடுகின்றோம். இவ் வருடம் 2018.10.18 அன்று எமது பாடசாலையின் வருடாந்த வாணிவிழாவை சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலைகளில் இவ்வாறான சமயவிழாக்களை கொண்டாடுவதன் மூலம் எமது மாணவர்கள் எமது வழிப்பாட்டு மரபுகளையும், சமய பாரம்பரியங்களையும் அறிந்து அதன் படி ஒழுக வாய்ப்பேற்படுகின்றது. வெறும் புத்தகத்தில் படிப்பதால் மட்டும் இவ்வாறான அறிவைப் பெறமுடியாது. மேலும் பல்லின மாணவர்கள் பயிலும் எமது பாடசாலையில் எமது சமயகலாசாரத்தை ஏனையோரும் மதித்துப் போற்ற வாய்ப்பேற்படுகின்றது. எனவே, இவ்வாறான விழாக்களில் சமூக சுகவாழ்விற்கும் வழிகாட்டுவதாக அமைகின்றன.

இவ் வருடமும் விழாவை முன்னிட்டு எமது இந்துமன்றத்தின் வெளியிடப்படவுள்ள "ஆத்மா" சஞ்சிகை வெகுசிறப்பாக பல்வேறு ஆக்கங்களையும் தாங்கி மிகச் சிறப்பாக வெளிவர உள்ளது.

இம் மலர் சிறப்பாக வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறுவதுடன் இவ் விழாவும் ஆத்மா சஞ்சிகையும் சிறப்பாக வெளிவர நாம் மனமார வாழ்த்துகின்றோம்.

தொடரட்டும் எமது சமயப்பணி வளரட்டும் எமது கலாச்சாரம்.

திருமதி உமா சந்திரசேகரன்
திருமதி K.சுமதி
திருமதி S.சுமதி
திருமதி. K. செந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் குழுவின் ஆசிச்செய்தி

**உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்**
**முன் அறியப்படும்**

எல்லாம் வல்ல இறைவனின் ஆசியுடன் புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் இந்து மாணவமன்றம் வாணிவிழா சிறப்புமலராக ஆத்மாவை வெளியிடுவதையெட்டி பெருமகிழ்ச்சியடைகிறோம், பழமையின் சின்னமாகவும் தொன்மையின் உறைவிடமாகவும் ஒழுக்கத்தின் திறவுகோலாகவும் ஆன்மாஈடேற்றத்தின் அச்சாணியாகவும் திகழ்வது இந்துசமயம். ஆன்மாக்களை சாந்தமாக வாழ்க்கையை அனுபவிக்க தூண்டுகோலாக நிற்பது எம் மதம்.

நவராத்திரிவிழாவானது சக்தி, செல்வம், கல்வி எனும் முப்பெருந்தேவிகளை வணங்கி அருள் பெறுவதற்காக கொண்டாடப்படுகின்றது. எமது பாடசாலையானது பத்துநாட்களும் பூஜை வழிபாடுகளுடன் இறுதிநாளான விஜயதசமி அன்று கலைநிகழ்வுகளுடன் பெருவிழாவாக கொண்டாடுகின்றது.

எனவே எம்மதத்தின் பெருமையை பறைச்சாற்றும் எமது மன்றத்தின் சஞ்சிகையை இவ் விழாவில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இதில் கட்டுரைகள், கவிதைகள் வரையப்பட்டுள்ளன. இதனைப் படித்து பயன் பெறலாம் என எண்ணுகிறோம், இதனை வெளியிட அனுமதி தந்த அதிபர், தமிழ்ப்பிரிவு, பிரதிஅதிபர் சகல இந்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றிகள்.

இதழ் குழு

திரு. V.முரளிதரன்
திருமதி.J. திருச்செல்வம்
திருமதி.மெடில்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து ....

"சொல்லின் கிழத்தி மெல்லிய வினையடி
சிந்தை வைத்தவைத் தியம்புவல் செய்யுட் கணியே....."

என்ற பாடல் அடிகளுக்கு உரிமை பூண்டவளான கலைமகளின் பாதார விந்தங்களுக்கு வந்தனம் தெரிவித்துக் கொண்டு புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் இந்து மன்றம் "ஆத்மா" என்ற சஞ்சிகையை பெருமிதத்துடன் வெளியிடுகின்றோம்.

சித்திரை மாதமும் புரட்டாதி மாதமும் யமதர்மனுடைய கோரப் பற்கள் என்பார்கள். இந்த பற்கள் நச்சுத்தன்மை உள்ளவை என்றும் இந்த மாதங்களில் வெப்ப மிகுதியாலும் தற்ப மிகுதியாலும் பலவிதமான நோய்கள் உண்டாகி பரவுகின்றன என்றும் கூறுவார்கள். இந்த நோய்களை தடுப்பதற்கு இறைவியின் இன்னருளைப் பெறுவதற்கு சித்திரை மாதத்தில் வசந்த நவராத்திரி விரதமும் புரட்டாசி மாதத்தில் பாத்திர பத நவராத்திரி விரதமும் கடைப்பிடிக்கப்படுகிறது. புரட்டாதி மாதத்துச் சுக்கில பட்ச பிரதமை முதல் நவமி ஈறாகிய ஒன்பது நாளும் பார்வதி தேவியாரைக் கும்பத்தில் பூஜை செய்து நவராத்திரி விரதம் அனுஸ்டிக்கப்படுகிறது.

எமது பாடசாலையில் கும்பம் வைத்து பத்து நாட்களும் பூஜை செய்யப்படுவதனுடன் மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டுவரும் முகமாக வாணி விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் "ஆத்மா" சஞ்சிகையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு அனுமதி தந்த அதிபர் , தமிழ்ப்பிரிவு பிரதி அதிபர் , ஒத்துழைப்பு நல்கிய பொறுப்பாசிரியர்கள் , ஏனைய அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

"முடியும் என்று நம்புபவர்களுக்கு எதுவும் முடியும்"

திருமதி. க.தியாகராஜா
ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளம் தலைவரின் வாழ்த்துச் செய்தி

"சரஸ்வதிநமஸ்துப்யம் வரதேகாமரூபணி
வித்தியாதும்பம் கரிஸ்யாமிஸித்திர்பலதுமேஸ்தா"

சரஸ்வதி ஞான வடிவானவள், ஞானம் இருக்கும் இடத்தில் அடக்கமும் இருக்கும். இச் சரஸ்வதிக்காக கொண்டாடப்படும் சரஸ்வதி பூஜையானது எமது பாடசாலையில் ஏனைய சக்தியின் வடிவங்களான துர்க்கா, இலட்சுமி, என்ற தெய்வங்களின் அருள் பெறவும் பத்து தினங்களும் பூஜை வழிபாட்டுடன் நடைபெறுகிறது. அதில் சரஸ்வதியின் தினத்தில் வாணிவிழாவாக நடாத்தப்படுகின்றது. இதில் வெளிவரும் "ஆத்மா" சஞ்சிகையானது எமது இளம் சகோதரர்களுக்கு பயன்தரும் ஆக்கங்களை தாங்கி வெளிவருகின்றது. இதனை வாழ்த்துவதுடன் வெளியிட உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே-"

R.டினுஷன்
வணிகப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளம் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

"அரிது அரிது மானிடராதல் அரிது"என்றார் ஔவையார், எனவே இம் மானிட வாழ்வின் மகிமையைப் பேண இந்து தர்மங்கள் பேணப்படல் வேண்டும். இந்து தர்மங்களை அறிந்து கொள்ள பாடசாலை முக்கிய பங்கு வகிக்கின்றது. வரலாற்று சிறப்புமிக்க கண்டி மாநகரின் மத்தியில் கல்வி எனும் அருளைப் பரப்பும் எமது பாடசாலையின் இந்துமன்றம் ஆத்மா சஞ்சிகை வெளியிடுவதை இட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதுகட்டுரைகள், கவிதைகள் தாங்கி வருகின்றது. ஆத்மா சஞ்சிகையை வாழ்த்துவதுடன் இதனை எதிர்காலச் சமுதாயத்தினரக்கும் நமக்கும் எடுத்துக் கொள்வார்கள் என நம்புகிறோம்.

இதனை வெளியிட அனுமதி தந்த அதிபர் ஆசிரியர், பிரதி அதிபர், ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

"இறைவனை வணங்கி வழிப்பாட்டாலன்றி
பொற் பொறாமை போன்ற தீயபண்புகளை அகற்ற முடியாது"

K.கோகுலவரதன்
வணிகப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளம் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

நாம் உலகத்தில் அன்பு, ஒழுக்கம், உண்மை, நேர்மை, பணிவு பெற்றோராக வாழ வேண்டும்.

எமது இந்துமதம் அன்புணர்வை நல்குவதாகவும் அறநெறியை ஊட்டுவதாகவும் அமைந்து இருப்பது நாம் செய்த பூர்வ ஜென்ம புண்ணியமாகும். இவ் அறநெறிகளைப் பரப்புவதில் பாடசாலை முக்கிய பங்கு வகிக்கின்றது. எமது பாடசாலை அதற்கு விதிவிலக்கல்ல. எமது பாடசாலையில் எமது பராம்பரியங்களை பேணும் வண்ணம் நவராத்திரி விழாவினை கொண்டாடுகிறது.

இவ் விழாவில் ஆத்மா என்ற சஞ்சிகை வெற்றிகரமாக வெளிவருகின்றது. இந்நூலை வெளியிடும் எமது இந்து மாணவ மன்றத்திற்கும் எமது சகோதரர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்

"அன்பே இறைவனின் ஊற்று
அன்பே சிவம்"

C.சஞ்ஜீவன்
வணிகப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளம் இதழாசிரியர்களின் வாழ்த்துச்செய்தி

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உலகத்தார் முன் அறியப்படும்"

எல்லாம் வல்ல இறைவனின் ஆசியுடன் புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் இந்து மன்றத்தால் வெளிவிடப்படும் "ஆத்மா" சஞ்சிகையானது வாணிவிழா அன்று வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சிறந்த ஆசான்களின் வழி காட்டலில் எமது மாணவர்களின் ஆற்றலில் மறைந்த நிற்கும் பண்புகள் யாவும் வெளிக் கொணர்ப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் ஆக்கங்களை தந்துதவிய ஆசிரியர்களுக்கும் வாழத்துக் கூறி அதிபர், பிரதி அதிபர்களுக்கும் எனது நன்றிகள். அத்துடன் என்னோடு தோள் நின்ற எமது சகோதர மாணவர்களுக்கு நன்றிகள் பல.

"தன் கடனடியேயுனைற் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

**அப்பர்**

M.மிதுஷான் - வணிகப்பிரிவு

S.யதுர்ஷணன் - விஞ்ஞானப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ
# ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விரதம்

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் சக்தியை குறித்து நோற்கப்படும் நோன்பாகும். நவராத்திரி இரு வகைப்படும். அவை வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி எனப்படும். சாரதா நவராத்திரியே நவராத்திரி விரதமாக அனுஷ்டிக்கப்படுகிறது. நவராத்திரி பூஜை புரட்டாதி மாதத்தில் அமாவாசை கழிந்த பிரதமை திதியில் ஆரம்பித்து நவமி முடியச் செய்யப்பட வேண்டும். ஆகவே புரட்டாதி மாதத்தில் ஒன்பது நாளும் அனுட்டிக்கப்படும் விரதம் நவராத்திரி நோன்பாகும்.

இவ்விரதம் முதல் மூன்று நாட்கள் முப்பெரும் தேவிகளான வீரம் தரும் துர்க்கைகாக அனுஷ்டிக்கப்படுகிறது. துர்க்கையானவள் வீரத்தின் தெய்வம் நெருப்பின் அழகுடன் ஆவேசப் பார்வை கொண்டவள். துர்க்கையை இச்சா சக்தி என்றும் காளி என்றும் குறிப்பிடுவோம். நவராத்திரியின் முதல் மூன்று நாட்களும் துர்க்கைக்கானதாகும்.

செல்வம் தரும் இலக்குமி தேவி மலரின் மென்மையுடன் அருள் பார்வையுடன் அழகாக விளங்குகின்றாள். இலக்குமி அமுத மயமானவள். பொன்னிற மேனியுடன் கமலாசனத்தில் வீற்றிருக்கின்றாள். இவளை நான்கு யானைகள் எப்பொழுதும் நீராட்டுகிறது. இவர் செல்வ வளம் தருபவள். இவளுக்கு தனிக்கோயில் திருப்பதியில் அமைந்துள்ளது. நவராத்திரியின் அடுத்த மூன்று நாட்களும் இலக்குமி தேவிக்குரியதாகும்.

கல்வியின் தெய்வம் சரஸ்வதி தேவியாகும். இவள் அமைதி பார்வையுடன் அழகாக பிரகாசிக்கின்றாள். சமுதாயத்தில் தொழில் ஞானம் புலமை ஞானம் என்ற இரண்டே பிரிவுகளில் அடங்குகிறது. இது ஞானத்துடன் தொடர்புடையது. எனவே சரஸ்வதி ஞானத்தின் தெய்வமாகும். இவளை பூஜிப்பதால் இது சரஸ்வதி பூஜை எனப்படுகிறது. நவராத்திரியின் இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதிக்குரியதாகும்.

ஒன்பது நாட்கள் மகிஷாசுரனுடன் போரிட்ட தேவி பத்தாம் நாள் அவளை அம்பெய்து வதம் செய்தாள். இந்நாளே விஜயதசமி எனப்படும். குழந்தைகளுக்கு கல்வியை இன்று தான் ஆரம்பிப்பார்கள். இன்று தொடங்கும் அனைத்து காரியங்களும் வெற்றி தரும் என்பது நம்பிக்கையாகும்.

S. சமிக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிஷேகப் பொருட்களும் அவற்றின் பயன்களும்

| | | |
|---|---|---|
| பால் | - | நீண்ட ஆயுளைத் தரும் |
| நல்லெண்ணெய் | - | சுகத்தைக் கொடுக்கும் |
| பஞ்சகௌவியம் | - | மனதைப் பரிசுத்தம் செய்யும் |
| பஞ்சாமிர்தம் | - | வெற்றியைத்தரும் |
| நெய் | - | மோட்சத்தைத் தரும் |
| தயிர் | - | மகப்பேற்றைத்தரும் |
| கரும்புச்சாறு | - | ஆரோக்கியத்தைத் தரும் |
| தேன் | - | கலைவாணியின் அருளைத்தரும் |
| பழரசம் | - | இயம பயத்தைப் போக்கும் |
| இளநீர் | - | உயர்ந்த பதவியைத் தரும் |
| சந்தனம் | - | இறைவனோடு இரண்டரக் கலக்கும் |
| கலசாபிஷேசம் | - | அஷ்டலக்ஷ்மி கடாட்சத்தைத்தரும் |
| வஸ்திரம் | - | வறுமையைத் தடுக்கும் |

S. சிஹுர்ஜிதன்
4T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன்

காலையில் எழுந்தேன் - தினம்
காத்திருந்தேன் இறைவா - உன்
காலடி பணிந்திடவே - தேன்
காதலில் திளைத்திடவே

இறைவன் என்ற பெயரிலே
என் மனம் நிறைத்தாய் - நீ
நிறைந்த நாள் முதலாய் என் - தூய
ஆன்மா சிறந்ததடா

விழிமூடி கை கூப்பி உனை
வணங்கினால் என்
உளமெங்கும் கோடை மழை
பொழியுதடா
ஐயோ பாவம் . என் வழி உன்னை
காண முடியாமல் தவிக்குதடா

வண்ண மலர் சூடி தேரினிலே
வீற்றிருந்து போதினிலே
மலரின் மணம் போல் அருள்
பரப்பி உம்மை காத்துக் கொண்டாய்

உடல் விருத்தி உனை நாடும்
வாய்பிழந்தேன் - ஏனெனில்
என் உயிர் தாங்கும்
உளம் சிதையும் என்றிருந்தேன்

உயிர் நீப்பினும் உனை
மறவேன் இறைவா
உன் புகழ் பாடியே
சிரம் தாழ்த்துவேன் தலைவா

R. விமலேஷ்
10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயவழிபாடு

1. கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும் அவரது அருளைப் பெறுவதற்குரிய இடம் ஆலயமாகும். பாலானது பசுவின் உடம்பில் பரவி இருந்தாலும் அதன் மடி வழியாகவே பால் கிடைக்கிறது. பூமியினுள் தண்ணீர் பரவி இருந்தாலும் கிணற்றின் மூலமாகவே jz z B;fp lffpd wJ. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் பழமொழிகள் வழக்கில் உள்ளன.

2. பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு ஓயாது உழைக்கின்ற மக்களுக்கும் இடவசதியற்ற குடிசைகளில் வாழ்கின்ற மக்களுக்கும் வசதியாக இறைவனை வழிபடுவதற்குரிய இடம் ஆலயமாகும்.

3. ஆலயத்தில் அனைவரும் ஒன்றாக வழிபடும் போது அங்கே தெய்வ அருள் கூடுகின்றது.

4. இதனால் வேண்டுதல்கள் விரைவில் நிறைவேறுகின்றன.

5. நாம் ஆலயத்திற்கு செல்லும் போது குளித்து தோய்த்த ஆடைகளை அணிந்து தூய்மையாக செல்ல வேண்டும்.

6. ஆலயங்களில் பூஜை நடக்கும் போது பலி பீடத்துக்கும் சுவாமிக்கும் குறுக்கே செல்ல கூடாது.

7. ஆலயத்தில் இறைவனைத் தவிர வேறு எவரையும் வணங்கக்கூடாது.

8. விபூதி, குங்குமம், பிரசாதம் வாங்கி நெற்றியில் இட்டபின் மீதமானவற்றை கீழே கொட்டுதல், தூண்களில் தடவுதல் கூடாது.

9. பிரசாதங்களை ஒருவருக்கு ஒருவர் மாற்றிக் கொள்ளவும் கூடாது

10. இவ்வாறானவற்றை கைக்கொண்டு ஆலய வழிப்பாட்டில் சிறப்பாக ஈடுபடுவோம்.

A. பிரகாஷ்

3T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரதங்கள்

விரதம் என்பது நாம் இறைவனை வேண்டி செய்யும் விஷேட வழிபாடாகும். விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடல் விரதமாகும். பின்வருவன சில விரதங்களாகும்

- வெள்ளிக்கிழமை விரதம்
- செவ்வாய்க்கிழமை விரதம்
- சிவ விரதம்
- விநாயகர் விரதம்
- வைரவ விரதம்
- சக்தி விரதம்
- முருக விரதம்
- விஷ்ணு விரதம்

V.கவினாஸ்
3T

## ஐந்தொழில்கள்

உலகைப் படைத்தவர் சிவபெருமான். எம்மைக் காப்பவரும் அவரே. சிவபெருமான் மூவகைத் திருமேனிகளை உடையவர். அருவம், உருவம், அருவுருவம் என்பன அத்திருமேனிகளாகும். எல்லா உயிர்கள் மீதும் சிவபெருமான் கருணை உள்ளவர். அதனால் அவர் ஐந்தொழில்களை புரிகிறார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவையே அவ் ஐந்தொழில்களாகும். ஐந்தொழில்களையும் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய திருமேனிகளைத் தாங்கி சிவபெருமான் நிகழ்த்துகின்றார்.

**ஆக்கம்**
**T. பிருந்தாவன்**
**4T**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்காலம்மையார்

இவர் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராவார். இவர் காரைக்கால் என்னும் ஊரிலே பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் புனிதவதியார். இவர் தக்க வயதடைந்ததும் தந்தை இவரை நாகப்பட்டினத்திலே பரமதத்தன் என்பவருக்குத் திருமணஞ் செய்து கொடுத்தார்.

இவர்களது இல்வாழ்க்கை இனிதாக நடந்து வந்தது. இவர் மிக்க சிவபக்தி உடையவர் இதனால் சிவனடியார்களை நன்கு உபசரித்து வந்தார். அதனால் பரமதத்தன் தன் மனைவியை தெய்வமாக எண்ணி மதுரைக்குச் சென்று விட்டார். அதன் பின் அம்மையார் துறவியானார். சிவபெருமானுக்கு தொண்டு செய்து வாழ்ந்து சிவபிரான் திருவடியை அடைந்தார்.

இவர் அருளிய நூல்கள் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை, மணிமாலை, மூத்த திருப்பதிகம் என்பனவாகும்.

இவர் காரைக்காலிலே பிறந்து வளர்ந்ததால் "காரைக்கால் அம்மையார் எனப் பெயர் பெற்றார்.

S.மித்ரேஷ்

2T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீணை

1. இது இசைகருவிகளில் ஒன்று ஆகும்.
2. தென் இந்தியாவில் தஞ்சாவூர் மாநிலத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப் படுகின்றது.
3. தென் இந்திய கலைஞர்களால் அதிகம் வாசிக்கப்படுகின்றது.
4. இலங்கையிலும் இவ்விசைக் கருவி தற்பொழுது பயன்படுத்தப்படுகின்றன.
5. இக்கருவியினை நவராத்திரி காலங்களில் அதிகமானோர் வாசிப்பர்.
6. வீணையினை கலைவாணி கையில் வைத்திருப்பதை அநேக படங்களில் காணலாம்
7. இது ஓர் நரம்பு கருவியாகும்.

ஹர்ஷாந்த்
3T

## தொண்டுகள்

கைம்மாறு எதையும் எதிர்பாராது செய்யும் பணி தொண்டு எனப்படும். தொண்டு செய்பவர் பிறரிடம் எதையும் எதிர்பார்த்தலாகாது. நாம் மற்றையவர்களுக்குத் தொண்டு செய்தால் இறைவன் எமக்கு துணை செய்வார். ஆகவே நாம் தொண்டுகள் செய்தல் வேண்டும். நாம் தொண்டுகளை விருப்புடன் செய்தல் வேண்டும். தொண்டுகள் செய்வதால் எமது மனதில் நிறைவு ஏற்படும்.

தொண்டுகளிலே பல வகை உண்டு. ஆலயத்தில் செய்யும் தொண்டு ஆலயத் தொண்டு எனப்படும். பூக்கள் பறித்தல், மாலை கட்டுதல், விளக்கேற்றுதல், தோரணம் கட்டுதல், கோவிலை சுத்தம் செய்தல், தோத்திரங்கள் பாடுதல் முதலியன ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகளாகும்.

ஏழைகளுக்கு உதவுதல், வயோதிபரை பேணுதல், நோயாளிகளுக்கு உதவுதல் பொதுச் சொத்துக்களை பேணுதல் என்பன் சமூகத்தில் செய்யக்கூடிய தொண்டுகளாகும்.

T. பிருந்தாவன்
4T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பியாண்டார் நம்பி

பொல்லாப் பிள்ளையாருக்கு படைத்த பிரசாதத்தை அவர் உண்ணாததைக் கண்டு தன் தலையினை பாறையில் மோதிக் கொண்டவரே நாம் அறிந்த நம்பியாண்டார் நம்பி. இவரே நாயன்மார்கள் பாடிய திருமுறைப் பாடல்களை முறையாக தொகுத்து எமக்குத் தந்தவர். நாம் இன்றும் பாடிக் கொண்டிருக்கும் திருமுறைப் பாடல்களை எமக்கு முறையாக தந்த பெருமை அவரையே சாரும். சிறுவர்களாகிய நாமும் அவரைப் பற்றி தெரிந்து கொள்வது அவசியமாகும்.

K.கவிலாஷ்
2T

## வணக்க முறைகள்

வணங்குதல் வடமொழியில் நமஸ்காரம் என்று அழைக்கப்படும். ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கு பணிவைக் காட்டுவதற்கு வணங்குதல் மிக முக்கியமாகும். இறைவன் சந்திதானத்தில் கொடிக்கம்பத்திற்கு முன்பாக விழுந்து வணங்க வேண்டும். இது ஐந்து வகைப்படும்.

ஏகாங்கம் தலை மட்டும் பணிந்து வணங்குதல், பெரியவர்களை கண்டால் இவ் ஏகாங்க வணக்கமே செய்ய வேண்டும்.

துவியங்கம் சிரசில் தலையில் வலக்கையில் மட்டும் வணங்குதல். திரியங்கம் சிரிசில் இருகைகளையும் விழுந்து வணங்குதல் கோபுரத்தை கண்டதும் இவ் வணக்கம் செய்ய வேண்டும்.

S பவித்திரன்
4 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலகவதியார்

சமயகுரவர்கள் அறுபத்து மூவர். அவர்களுள் மங்கையர்கரசியார் திலகவதியார், காரைக்கால் அம்மையார் ஆகிய மூவரும் பெண்ணடியார்கள் ஆவர்.

தமிழகத்திலே திருமுனைப்பாடி நாட்டிலே புகழனாருக்கும் , மாதினியாருக்கும் அவதரித்தவரே திலகவதியார் ஆவார்.

புகழனார் தமக்குறியமைப் பொருவில்குலக் குடியின் கண்
மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்
திகழுமலர்ச் செங்கமல நிறையிதழினகவயினார்
திருவனைய திலகவதியார் பிறந்தார்.

என்று சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் திலகவதியாரின் திருவவதாரம் பற்றி குறிப்பிட்டுள்ளார். திலகவதியாரின் தம்பி மருணீக்கியார் ஆவார்.

திருமண வயதை எட்டிய திலகவதியாருக்கு கலிப்பகையார் என்பவரை நிச்சயம் செய்தனர். திருமண நாளிற்கு முன் யுத்த களத்திற்கு சென்ற கலிப்பகையார் போரில் வீரமரணம் எய்தினார். துக்கம் தாங்காத புகழனாரும் இறைவனடி சேர்ந்தார். கணவனை இழந்த மாதினியாரும் உடனுயிர் நீத்தார். திருமணமாகாவிட்டாலும் நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் இறந்த செய்தியை கேட்ட திலகவதியார் தனது உடலை மாய்த்துக் கொள்ள முற்பட்ட பொழுதும் தம்பிக்காக வாழத்துணிந்தார். தம்பி சமணசமயத்தை தழுவிய பின் திலகவதியார் கெடில் நதிக்கரையில் அமைந்துள்ள திருவீராட்டானேஸ்வரர் ஆலயத்தில் சிவபணி செய்து தனது வாழ்வின் இறுதி நாட்களைக் கழித்து ஈற்றில் சிவபதம் அடைந்து சிவனோடு இரண்டறக் கலந்தார்.

S.மயூரன்
2T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ விழுமியங்கள்

மனித வாழ்வு மேம்பாடானது எனக் கருதுவதற்கு உதவும் பெறுமதி மிக்க வாழ்க்கை பண்புகளே விழுமியங்கள் எனப்படுகின்றன. எமது வாழ்வில் போற்றி வளர்க்க வேண்டிய உயரிய மனிதப் பண்புகள் பல உள்ளன. அவையாவன உளத்தூய்மை, சகிப்புத்தன்மை, சமாதானம், அமைதி, உதவி செய்தல் தலமைத்துவம் என்பனவையாகும்.

### (1) உளத்தூய்மை

மனம் தூய்மையாய் இருத்தல் உளத் தூய்மையாகும், அகத் தூய்மை என்பது அன்பால் அமைதியும், புறத்தூய்மை நீரால் அமையும். சிந்தனை, சொல், செயல் என்பன தூய்மையானதாக அமைய அன்பு வேண்டும். இதன் மூலம் பொய், களவு, போன்ற பஞ்சபாவங்கள் இல்லாத ஒழியும். உள்ளம் தூய்மையாய் இருக்கும் போது அங்கே பொறாமை இருக்காது. மனதில் அழுக்கில்லாமல் இருப்பது எல்லா அறங்களிலும் மேலானது. அறிவு மட்டும் உயர் விழுமியமாகாது. ஒருவர் வாழும் பொருட்டுக் சம்பாதிக்க அது உதவலாம். வாழ்வில் சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியவாறு அறப் பண்புடைய உளத்தூய்மையே மனிதனை உயர்ந்தவனாக்கிறது.

### (2) சகிப்புத்தன்மை

மனத்தூய்மை உள்ள இடத்திலேயே சகிப்புத்தன்மை ஏற்படும். அந்நிலையில் சமாதானம் பிறக்கும் . இந்நிலையில் பிறருக்கு உதவி செய்தல் நிகழும். உண்மையான தலைமைத்துவ பண்பும் மனத் தூய்மையால் விருத்தி அடையும். மனத்தூய்மையே அதி உயர்ந்த விழுமியங்களில் ஒன்றாகும். ஒருவர் மற்றவருடன் பழகும் போதும், அயலவருடன் பழகும் போதும் சகிப்புத் தன்மை இல்லாது விட்டால் உறவு கொள்ளமுடியாது. மற்றவர் கூறும் கருத்துக்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவற்றை செவிமடுத்தல் சிறந்த பண்பாகும். வாழக்கையில் வெற்றிக்குரிய நற்சாட்சியாக அமைவது பணிவாகும்

### (3) சமாதானம்

நாம் மற்றவருடன் மனப்பூர்வமான நல்லிணக்கத்துடன் இருத்தல் சமாதானமாகும். நமது பெற்றோர், உடன் அயலவர், சகோதரர்கள், சகோதரிகள், அன்புடன் வாழ்வதன் மூலம் அமைதி அடைய முடியும். அமைதி உள்ளபோது சமாதானம் நிலைபெறும். அன்பில்லா வாழ்க்கை அமைதியற்றது. எனவே சமாதானம் நிலைபெற நாம் மற்றவர்களை உண்மைய விசுவாசிப்பதில் மூலமே உண்மையான சமாதானத்தை வளர்த்துக் கொள்ள முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (4) உதவி செய்தல்

எவ்வித எதிர்பார்ப்பையும் பெறாது செய்யும் சேவையே உதவியாகும். எதுவுமற்ற உதவி மூலம் இறையருள் கிட்டும். வீட்டில் வசிக்கும் பெற்றோர்கள், உறவினர்களுக்கும், முதியோர்களுக்கும் உதவி புரிதல் சிறந்த பண்பாகும். சமூகத்தில் யாருக்கு உதவி தேவையோ அவர்களுக்கு மனப்பூர்வமாக உதவி செய்ய வேண்டும். நோயாளிகள், அங்கவீனர், வயோதிபர் அனைவருக்கும் நம்மாலான உதவிகளைச் செய்வது சிறந்த பண்பாகும். பாடசாலைகளில் நடைபெறும் கொண்டாட்டங்களுக்கு ஆலயத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு உதவி செய்தல் சாலச் சிறந்ததாகும், அமைதியான மனதிலே உதவி செய்யும் மனப்பாங்கு உருவாகும்.

## (5) தலைமைத்துவம்

உரிய விடயத்தை உரிய நேரத்தில் முன்னெடுத்துச் செல்லும் தகைமை தலைமைத்துவ பண்பாகும். சுயநலமின்றி பிறர் நலம் பேணும் ஒருவரே உண்மையான தலைவனாக முடியும். சிறந்த ஒரு தலைவன் கட்டுப்பாடுடையவனாக சூழலை ஒட்டியவனாகவும் சிறந்த ஒழுங்கினைப்பாளராகவும் இருப்பான். மொழியாற்றல் ஒரு தலைவனுக்கு இன்றியமையாத பண்பாகும். தலைவன் தான் எடுத்துக் கொண்டு விடயத்தை முடிப்பதற்கு ஏனையவர்களின் உதவி கிடைக்காவிட்டாலும் தனித்து நின்றேனும் செயற்படும் திறன் பெற்றிருக்க வேண்டும். பொறுப்புக்களை விரும்பி ஏற்றுச் செய்யும் வேலை தலைமைத்துவப் பண்புகளில் ஒன்றாகும், நாயன்மார்கள் நாட்டில் ஏற்பட்ட துன்பங்களை தீர்க்க தலைமை ஏற்று நடந்தமை குறிப்பிடத்துக்கது. மாணவர்கள் பாடசாலையில் கற்கும் காலத்திலே அவர்களிடையே தலைமைத்துவப் பண்புகளை வளர்பதற்காக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். பாடசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் பல்வேறு மன்றங்களில் மாணவர்கள் இணைந்து அந்த அமைப்புக்களில் மூலம் ஆற்ற வேண்டிய கடமைகளை செய்தல் சிறப்புடைய தலமைத்துவத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

A. Arun
13T விஞ்ஞான பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் நவக்கிரக வழிபாடு

இந்துக்களின் வழிபாட்டுக்குரியதாயமைந்த ஒன்பது கிரகங்கள் நவக்கிரகங்கள் என்று அழைக்கப்படும். நவக்கிரகங்கள் தமிழில் ஒன்பான் கோள்கள் என அழைக்கப்படுகின்றன. இந்துக்களின் வாழ்வில் முக்கியமான ஒரு உறுப்பு ஜாதகமாகும். இந்த ஜாதகமானது நவக்கிரகங்கள் இல்லாமல் அமைவதில்லை. "நவம்" என்றால் ஒன்பது கிரகம் என்றால் பற்றி இழுப்பது எனப் பொருள்படும். அவரவர் செய்த பாவப் புண்ணியங்களுக்கு ஏற்ப நவக்கிரகங்கள் பலாப்பலன்களை அளிக்கின்றன. இதுவே பட்டினத்தார் தம் பாடலிலே பின்வருமாறு கூறுகின்றார்.

"பற்றித் தொடரும் இரு வினையும் புண்ணிய பாவமுமே"

மேற்காணும் வரிகள் மூலம் பாவ புண்ணியங்களை நம்மை பின்தொடர்கின்றன என்ற முடிவுக்கு வரலாம்.

நவக்கிரகங்களும் அவற்றின் தமிழ்ப் பெயர்களும்

| | | | |
|---|---|---|---|
| 1, | சூரியன் | - | கதிரவன், ஞாயிறு |
| 2. | சந்திரன் | - | திங்கள் |
| 3. | செவ்வாய் | - | நிலமகன் |
| 4. | புதன் | - | கணக்கன் , புலவன் |
| 5. | குரு | - | சீலன், வியாழன் |
| 6, | சுக்கிரன் | - | சுங்கன், வெள்ளி |
| 7. | சனி | - | காரி, முதுமகன் |
| 8. | ராகு | - | கருநாகன் |
| 9. | கேது | - | செந்நாகன் |

என்பனவாகும்.

நவக்கிரகங்களை வழிபடுதல் மிகத் தொன்மையான வழிபாடாக இருந்துள்ளது. வரலாற்று ஆய்வின் படி புத்தர் காலத்திலும் இந்த வழிபாடு இருந்துள்ளது. இருப்பினும் நவக்கிரகங்களை தனித்தே அக்காலத்தில் வழிபட்டு வந்திருக்கின்றனர். அனைத்தையும் ஒரு சேர வழிபடும் வழக்கம் கி.பி 11ம் நூற்றாண்டில் தான் தோன்றியிருக்கின்றது. இது சோழர் ஆட்சிக்காலமாகும்.

பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் கற்களிலான உயரமான மேடையின் மீது நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. தற்போது இந்த வழமையே பெரும்பாலான சைவ ஆலயங்களில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

நவக்கிரகங்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

1. **சூரியன் -** காசியப்ப முனிவரின் குமாரர் . ஒளிப்பிழம்பானவர் . நவக்கிரகங்களில் முதன்மை ஸ்தானம் பெறுபவர். நவக்கிரகங்களில் நடுவில் அமர்ந்திருப்பவர். இவரது மனைவிகள் சாயா மற்றும் சம்ஞா எனும் இருவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **சந்திரன்** - பாற்கடலில் தோன்றியவர். தண்ணொளி உடையவர். வளர்பிறையில் சுபராகவும் தேய்பிறையில் பாபராகவும் விளங்குபவர், தட்சணின் 27 மகள்களான நட்சத்திரங்களை திருமணம் கொண்டவர். இருப்பினும் இவர்களில் ரோகிணியோடு மட்டும் அன்போடு வாழ்ந்து வந்தார். தனது மற்றைய மகள்களை கவனிக்காத காரணத்தால் சந்திரனின் அழகு நாளொன்றுக்கு ஒன்று என அழிந்து மறைந்து போகும் படி தட்சன் சாபமிட்டான். பதினான்கு அழகுகளையும் இழந்த சந்திரன் மிகுதி அழகை காப்பாற்றிக்கொள்ள சிவனிடம் தஞ்சமடைந்தார் சந்திரன்.

3. **செவ்வாய்** - இவர் வீரபத்திரர் அம்சம். சுப்ரமணியரை தெய்வமாக கொண்ட இவர் பாவ பலனை கொடுக்கும் குரூரர். இவரை அங்காரகன் எனவும் அழைப்பர். இவரது துணைவி மங்களா தேவி ஆவார். அங்காரகன் என்றால் சிவப்பு நிறத்தவன் என்று பொருள். இவர் பூமாதேவியின் மகனாவார். இவர் போரின் கடவுள் எனவும் அழைக்கப்படுகிறார், ஆட்டுக்கடாவை வாகனமாகக் கொண்டவர். சிவபெருமான் அந்தகாசுரன் எனும் அசுரனை அழிக்கும் போது சிவனின் வியர்வையிலிருந்து உருவாகி போரின் போது அசுரனின் உடலில் இருந்து விழுந்த இரதத்தை நிலத்தில் விழாது உள்வாங்கினார். இதனாலேயே இவர்சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கிறார் என்பது நம்பிக்கை.

4. **புதன்** - இது சந்திரனுடைய குமாரர். தீய கிரகங்கள் விளைவிக்கும் பீடைகளை அழிக்கும் ஆற்றல் இவருக்கு உண்டு. இவர் சந்திரனுக்கும் தாரா தேவிக்கும் பிறந்தவராவார். தாரா தேவி பிரகஸ்பதியின் மனைவி சந்திரன் அவளை கவர்ந்து சென்று வைத்திருந்த காலத்தே தாராவுக்கு பிறந்த மகனே புதன். இவரது துணைவி இலாதேவி ஆவாள். இவரது வாகனம் குதிரையாகும்.

5. **குரு** - இவர் தேவகுரு எனும் பட்டத்தைப் பெற்றவராவார். இவருடைய பார்வையால் தோஷங்கள் எல்லாம் நீங்கிவிடும். இவர் ஆங்கிரச முனிவரின் மகனாவார், இவர் நான்கு வேதங்களையும், அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்தவர். எண்ணற்ற யாகங்களை செய்து தேவ குருவாக மாறினார். இவரது துனைவி தாரை தேவி என்பவராவார். இவருக்கு அந்தணன், அமைச்சன், ஆண்டளப்பான், குரு, சிகிண்டிசன், சீவன், சுரகுரு, தாராபதி , தெய்வமந்திரி, நற்கோள், பிருகஸ்பதி, பீதகன், பொன்னன், மறையோன், வேதன், வேந்தன், என் பதினெட்டு பெயர்கள் உள்ளதாக புராணங்கள் கூறுகின்றன. இவருடைய வாகனம் யானையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **சுக்கிரன்** - இவர் அசுர குரு ஆவார். இவர் அசுரர்களின் குல குரு ஆவார், சுக்கிரன் என்பதற்கு தெளிவு, தூய்மை, பிரகாசம், என்று பொருள்படும், இவர் தேவகுருவாகிய பிரகஸ்பதியின் சகோதரர் ஆவார், பிரகஸ்பதியின் மகன் கசன் இவரது சீடர்களில் ஒருவனாவான், இவரது வாகனம் முதலையாகும்.

7. **சனி** - இவர் சூரியனுடைய குமாரர் பாவ பலன் தருவதில் ஈசுவர் பட்டம் பெற்றவர். சனியைப் போல் கொடுப்பாருமில்லை கெடுப்பாரமில்லை என்பது பழமொழியாகும். இவரது தாயார் சாயாதேவி. சனி பகவானின் கால் சிறிது ஊனம் எனவும் அதனால் மெதுவாக நடப்பவர் எனவும் கூறுப்படுகின்றது. சனிதேவன். கர்மாகாரகன், சாயாபுத்திரன் என்பன இவரின் வேறு பெயர்களாகும். நவக்கிரகங்களில் ஈசுவரப் பட்டம் பெற்ற ஒருவர் இவராவார். நீலா தேவி மாந்தா தேவி ஆகியோர் இவரது மனைவியராவர். இவரது பார்வையிலிருந்து சிவபிரான் உட்பட யாருமே தப்பியதில்லை என்பர். இவரது வாகனம் காகமாகும்.

8. **ராகு** - இவர் அசுரத்தலையும், நாக உடலும் உடையவர். மிக்க வீரமுடையவர். கருநாகம் என அழைக்கப்படுபவர், தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலை கடைந்து எடுத்த அமிர்தத்தை திருமால் மோகினி அவதாரம் கொண்டு தேவர்களுக்கு வழங்குகையில் இரு அசுரன் குறுக்கே புகுந்து அமிர்தத்தை பருகினான் இதைக் கண்ட திருமால் அமிர்தம் குடித்த அசுரனின் தலையில் வெட்டினார். அமிர்தம் குடித்த தலையுடன் கூடிய பகுதி கேதுவாகவும், முண்டம் ராகுவாகவும் மாறியது. இவரது மனைவி காராளி. இவரது வாகனம் நீல சிம்மமாகும்.

9. **கேது** - இவர் நாகத்தலையும், அசுர உடலையும் உடையவர். சிலி செந்நாகம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுபவர், இவரது மனைவி சித்திரலேகா இவரது வாகனம் கழுகாகும்.

இவ்வாறாக பல்வேறு நன்மைகளையும் தீமைகளையும், அதிசயங்களையும் உடைய இந்த ஒன்பது கிரகங்களுமே மக்களின் வாழ்வை தீர்மானிக்கின்றது என்பர், இந்த ஒன்பது கிரகங்களையும் வணங்கி வாழ்வில் பல்வேறு வெற்றிகளை சந்தித்து வாழ்வோமாக.

H. Arjun
12 T Arts

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் சைவசமயியும்

பிரம்ம தேவர் படைப்புத் தொழிலை செய்த பின் இந்தப் பூவுலகிலே ஆன்மாக்கள் பிறப்பெடுத்தன. ஆன்மாக்கள் தமது இலட்சியமாகிய முக்தியை நிறைவேற்றுவதற்கு இந்த சிருஷ்டி ஊடகமாக அமைகின்றது. ஆன்மாவானது மெய்ஞ்ஞானத்தினால் பரம்பொருளை உணர்ந்து, பரம்பொருளே சிருஷ்டி என அறிந்து அந்தப் பரம்பொருளுக்குத் தொண்டாற்றுவதன் மூலம் முக்தி காணுகிறது. ஆனாலும் யுகம் யுகமாய் ஏற்படும் மாற்றத்தினால் ஆன்மாக்கள் அநாவசியமாய் இச்சைகளில் கட்டுண்டு தம் இலட்சியத்தையே மறந்து விடுகின்றன. தமது நிலையினின்று அவை கீழிறங்குகின்றன. அதுவும் இது கலியுகம். ஆன்மா அநாதியாக தனித்து இந்த உலகிலேயே நிலையின்று இருப்பது அது தனது தர்ம வினையை ஏற்படுத்துவதற்கு சாதகமாகிறது. ஆகவே நாமும் நம் வாழ்வில் மனதளவில் ஓர் திருப்தியை காண வேண்டுமாயின் உலக இச்சைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட பரம்பொருளை நாட வேண்டும். அப்படியென்றால் அதற்கு நாம் என்ன செய்வது?.......

இந்த உலகிலே நாம் எம்மால் ஆன வரை நன்மைகளை செய்ய வேண்டும். அதனூடாக புண்ணியங்கள் விளையும் எமக்கென்று ஓர் இலட்சியத்தை தாபித்து அதனைத் திட்டமிட்டு நிறைவேற்றி வெற்றி காண வேண்டும். இவ்வாறு வாழும் வாழ்க்கையில் சைவத்தைப் பின்பற்றும் நாம் சிவமயத் தத்துவத்தை உணர்ந்து யாவற்றுக்கும் ஆதாரமான இறைவனிடம் பக்தி கொள்ள வேண்டும். ஆலய வழிபாடாற்றல் , விரதமிருத்தல், விழுமியங்களைப் பேணுதல், சைவ கலாசாரங்களைப் பேணுதல், சரியை மற்றும் கிரியை முதலான வகையில் தொண்டுகளாற்றுதல் மற்றும் இறையுணர்வை ஏனையோரிடம் ஏற்படுத்தும் வகையிலான சமய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றன எம் வாழ்வை வளப்படுத்த வல்லன. ஆகவே சைவசமயிகளான நாம் இப்பூவுலகத்தாருக்கு சிறந்த முன்மாதிரிகளாய் உருவாவோமாக.

அன்பே சிவம்
அதுவே நலம் !.........

S. ஷவீன்
11T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் மஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே கடவுள்

கடவுளை கண்டு விட்டோம் என்று களிக்கூத்தாடுவோர் பலர், கடவுளைக் காண பல வழி முறைகளை தேடுவோர் பலர், கடவுளைப் பற்றி கவலையே வேண்டாம். எமது கடமையை சரியாகச் செய்து வந்தால் போதும் என்று உரைப்போரும் பலர். அன்புள்ளவர்கள் அறநெறியைப் பின்பற்றி வாழ்வார்கள், அவர்கள் மனதில் தீங்கு செய்யும் சிந்தனையோ, மற்றையவர்கள் பற்றிய கீழான மனப்பாங்குகளோ மனதில் ஏற்படாது . அன்பற்றி கல் மனம் படைத்தவர்கள் அறநெறியை பின்பற்றாது தாம் வாழ்வதற்காகவும், இன்ப சுகங்களை அனுபவிப்பதற்காகவும் எதையும் செய்யும் மனவுறுதியை கொண்டவர்களாகவும் காணப்படுவார்கள்.

அன்பு நெறியே கடவுள் நெறி: அருள் நெறியே கடவுள் வழி: எல்லோரிடம் அன்பு காட்டுபவர்களே "உண்மையான கடவுள் பகதர்கள்" அரசர்களிடம் இளகிய மனமும், இரக்க குணமும், தன்னலமற்ற சேவையும், தீமை செய்யாத உயர் பண்பும் நிறைந்து காணப்படும். அன்பு மார்க்கத்தில் உண்மையை அறிந்தவர்கள் அன்பு வேறு, ஆண்டவன் வேறு என்று சிந்திக்க மாட்டார்கள் அன்பு தான் ஆண்டவன், ஆண்டவன் தான் அன்பு.

இந்த உண்மையை திருமூலர் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார்.

"அன்பும் சிவமும்
இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது
ஆரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவது
ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமானய்
அமர்ந்தருப்பாரே"

தமிழர் மரபிலே வந்த திருமூலர் தமிழர்களின் பண்பையே எடுத்துக் காட்டினார். எல்லோரிடமும் அன்பு காட்டுவதே தமிழ் மக்களின் மிகச் சிறந்த பண்பு அனைவருடனும் கலந்த வாழ்ந்த களிப்படைவதே தமிழர் மரபு.

எனவே தான் தமிழர் வாழ்வியலில் ஏற்படும் பல்வேறுபட்ட பண்டிகைகள், திருவிழாக்கள், மதச் சடங்குகளின் போது பக்தியை முன்னிலைப்படுத்தி அன்பு நெறி பறைசாற்றப்படுகிறது. உற்றார் உறவினர், சொந்தபந்தங்கள், அயலவர்கள் புடை சூழ அந்நிகழ்வுகள் இனிதே நடைப்பெறுகிறது. மாந்தர்கள் மத்தியில் ஒற்றுமை தலைத்தோடுகிறது. அன்பு அடுத்து வரும் சந்ததிக்கு ஊட்டப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மாணவ சமுதாயமே நாளைய மாபெரும் தலைவர்கள். எனவே இளைய சமுதாயம் இவற்றை கட்டிக்காக்க வேண்டிய மிகப் பெரிய தார்மீக பொறுப்பும், கடமையும் தம் உள்ளத்தே கொண்டு இயங்க வேண்டும். தற்கால சமுதாய போக்கை அவதானிக்கும் போது எதிர்காலம் பற்றி கிலி கொள்ளவும், சிந்திக்கவும் வைக்கிறது அதற்கு பல்வேறுபட்ட காரணங்கள் முன் வைக்கப்படினும் சிறந்த வழிகாட்டல் மூலமும், அன்பு, இரக்கம், பாசம், நேசம். கருணை போன்ற அருங்குணங்கள் மூலம் இளைய சமுதாயத்தை வழிப்படுத்த முடியும். இதற்கு கற்ற ஆசிரிய சமூகம் முன்னுதாரணமாக செயற்படும்போது எதிர்காலம் இளையோரிடம் வசப்படும் என்பது உறுதியே.

"எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க"

ஓம் சாந்தி .. .சாந்தி

என் கிஷோர்குமார்
பகுதித் தலைவர்
புனித சில்வெஸ்ரர் கல்லூரி

## தருமம் காத்தல்

மனம், வாக்கு, காயம் மூன்றும் அடக்கியாளப்படும் மாசு நீர்ந்த எண்ணம் எம் மனதில் உருவாக வேண்டும். தருமத்திற்கு முரண்பட்ட எண்ணங்கள் உள்ளத்தில் இல்லாதிருப்பது அவசியமாகும். பேச்சும் தருமத்திற்கு உதவாக வகையில் இருக்கலாகாது.

எம் எண்ணத்தில் மாசு இல்லையே, பேச்சு எப்படியிருந்தால் என்ன என்று வாதிடக்கூடாது. மனதையும் உடலையும் காப்பதோடு வாயையும் காப்பது மிக முக்கியமானதாகும்.

மாசு நிறைந்த உள்ளத்திலிருந்து தோன்றும் பேச்சை பேசக் கூடாது. தீய எண்ணத்தோடு சேராத பேச்சாக இருந்தாலும் பயனற்ற பேச்சாக இருக்க கூடாது. துறவிகளுக்கு மௌனம் மிக முக்கியமான விரதம். அதைப்போல் இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களுக்குப் பயனற்ற பேச்சை விலக்குவது முக்கியமான விரதமாகும். பூரண மௌனம் இல்லத்தாருக்கு வேண்டியதில்லை. பயனற்ற பேச்சில் மகிழாமல் இருப்பதுமிகப் பெரிய தர்மமாகும்.

இறையருள் வேண்டி, இறை புகழ் பாடி, நல்வார்த்தை உரைத்து என்றும் எப்போதும் தூய சிந்தனையோடு, மற்றவர்களுக்கு தான தர்மங்கள் செய்து, இப் புவியில் நல்லவர்களாக வாழ்வதே மானிடப்பிறப்பின் மகத்துவத்தை உணர்த்துவதாக அமைகின்றது.

திருமதி சரோஜினி இராஜேஸ்வரன்
(ஆசிரியை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் கூறும் வாழ்க்கை நெறிகள்

கடவுள் கேட்க மனிதன் சொன்னது திருவாசகம். மனிதன் கேட்க கடவுள் சொன்னது பகவத்கீதை. மனிதன் கேட்க மனிதன் சொன்னது திருக்குறள். வாழ்க்கை என்பது வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலாக அமைதல் வேண்டும். என்பதை அறநுல்கள் பல எடுத்தியம்புகின்றன. அவ்வரிசையால் முதன்மை பெறுவது வள்ளுவரின் பொய்யா மொழியாகிய திருக்குறளேயாகும். இது எழுந்த காலத்தை விட்டு வாழும் காலத்திற்கு வழிகாட்டுகின்றசிறப்பினைப் பெற்றது, தனி இல்லத்திற்கோ, தனி மனிதனிற்கோ, தனி சமயத்திற்கோ உரியதல்ல, இது உலக பொது மறை. இது பழ மொழிகளில் அச்சிடப்பட்டு விற்கப்படுகின்றது.

சிறப்பாக திருக்குறள் இந்து சமய கருத்துக்களை ஆங்காங்கே தெளிந்துள்ளது எனலாம். ஆறறிவுடன் பிறந்துவிட்ட மனிதனின் தன்மைகள் என்ன? அவன் இவ்வுலகிலே இருக்கும் வரை ஆற்ற வேண்டிய கடமைகள் என்ன? அவன் இவ்வுலகினை விட்டு சென்ற பின் நிகழ்வது என்னவென விளக்குவது. திருக்குறள் நன்னெறியாய் நிற்பதே சிறந்த வாழ்க்கை நெறி எனப்படுகின்றது. சிறந்த அறநெறியால் நிற்றலையே வள்ளுவ பெருந்தகை அவர்களும் தனது நூலில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் உள்ளடக்கி கூறியுள்ளார். உலகத்தில் பிறந்தவன் துறவறத்தில் மட்டுமே நின்று அறத்தை போதிக்க வேண்டுமென்று நினைப்பது தவறு. இல்லறம் என்னும நல்லறத்தில் என் நின்று உலகில் வழிக்காட்டியாக திகழ முடியும் என்பதனையயே வள்ளுவர் அறத்துப்பாலில் இல்லறவியலில் சிறப்பினைப் போற்றி ஒரு சிறந்த இல்லத் தலைவனின் பண்புகளைப் பற்றியும் அவன் பிறருடம் ஒழுக வேண்டிய முறைகளைப் பற்றியும் கூறியுள்ளதுடன் இல் வாழ்க்கையானது எவ்வாறு அமைய வேண்டிய கடமைகளை எடுத்தியம்பியுள்ளார்.

எனவே எல்லாவற்றிற்கும் மூலதாரகமாக ஒருவள் அன்புடையவளாக இருப்பாளாயின் அவள் எல்லா சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் அன்பை நல்ல முறையில் பயன்படுத்தி தனது வாழக்கையை சிறப்புடன் அமைத்துக் கொள்வாள் என்கிறார்.

“ அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் எமக்கு உணர்த்தப்படுவது அன்பின் ஊடாக அறத்தைப் பேணல் வேண்டும். அன்புடன் வாழும் மனிதனின் ஆசைகள் நிறைய இருக்கின்றதாள் ஒரு செல்வந்தனாக இருக்க வேண்டும் என ஆசைப்படுகின்றான். பொருட்களை சேர்க்க முயற்சிக்கின்றான், இவ்வாறு பொருட்களைச் சேர்க்கும் போது வழிதவறிப் பாவத்தைச் சேர்க்க கூடாது. இந்து தர்மம் போதிக்கும் அறவழியில் பொருளை ஈட்ட வேண்டும் என்கிறோம். வள்ளுவர் நன்றாக உழைப்பதன் மூலம் பொருளைத் தேட பிறரிடத்திலிருந்து கொலை. கொள்ளை என்பதை மேற்கொள்ளாது ஈட்டி அதை பிறருக்கு பகிர்ந்து கொடுத்து வாழ்பவனுடைய இல்வாழ்க்கையில் இல்லத் தலைவன் மாத்திரம் அறநெறிப்படி ஒழுகினாள் போதாது. இல்லறம் என்ற இரட்டை மாட்டு வண்டி சீராக ஓட கணவன் மனைவி என்ற எருதுகளின் சீரான வேகம் அவசியம்,

மனைவியானவள் கணவனின் வரவுக்குத் தகுந்தபடி செலவுகளைச் செய்து அவனது பெயரையும் புகழையும் காக்க வேண்டும். பெண்ணை சிறையிட்டு தடுப்பதில் எதவித பயனுமில்லை என்கிறார் வள்ளுவர்.

"சிறைகாக்கும் காப்பு எவள் செய்யும்
மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை"

இல்லறத்தில் பேரும் புகழும் நிலைப்பதற்கு சிறந்த வாரிசுகளை உருவாக்க வேண்டும். குறிக்கோளை எய்துவதற்கு சிறந்த மக்கட் செல்வங்களை உலகிற்கு ஈர்ந்தளிப்பது கடமையாகின்றது. அத்தோடு பிள்ளை செல்வங்கள் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய நற்கருமங்கள் பற்றி கூறும் பொழுத ஒரு மகளானவன் தன் தந்தைக்கு நன்றி கடனாற்றும் போது இவ்வளவு சிறப்புடைய மகனைப்பெறுவதற்கு இவனுடைய தந்தை என்ன செய்தானோ என்ற புகழ் சொல்லாகும், வள்ளுவர் வாழ்க்கை நெறியில் ஒழுக்கம் பற்றி சிறப்பான பல கருத்துக்களை முன் வைக்கின்றார்.

"ஓழுக்கம் விழுப்பம் தரலால் ஓழக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

ஒழுக்கம் பற்றி கூறாத மனிதர்களே இல்லை எனினும் இந்து சமயம் கூறுகின்ற திருக்குறளில் காணப்படுகின்றது எனலாம், எந்த அறத்தினை அழித்தவர்களுக்குப் தப்பி பிழைக்க வழி உண்டாகும். ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை என்று வள்ளுவர் நன்றியின் உயர்ச்சியினைப் பற்றிக் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் கூறும் வாழ்க்கை நெறியினை மேலும் நோக்குமாயின் அடக்கம் பற்றி மிகவும் சிறப்பான கூறியுள்ளார், அதாவது தீயினால் சுட்டபுண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் நவின்ற தீய சொல்லினால் உண்டான வடு என்றும் ஆறாது. ஒவ்வொரு மனிதனுக்கும் நாவடக்கம் இன்றியமையாதது. நட்பு பற்றிக் கூறுவதாவது உடையை இழக்கப் போகின்றவனுடைய கை உடனே உதவிக்காப்பது போல் நண்பனுக்கும் துன்பம் வந்தால் அப்பொழுதே சென்று துன்பத்தைக்களைவது தான் சிறந்த நட்பு என்று நட்பின் சிறப்பினை கூறியுள்ளார்.

எனவே வள்ளுவர் காட்டும் நெறியில் இவ்வாழ்க்கை வாழ்ந்து சிறந்து இல்லறத்தைப் பேணுவதோடு செல்விருந்தோம்பி வருவிருந்தாக காத்திருப்பவளாக இருக்க வேண்டும்.

இப்பொது வரும் உறவினர்களை அக மலர்ந்து முக மலர வரவேற்று உபசரித்தால் லட்சுமி கடாட்சம் தரும் என்கிறது எமது சமயநெறி. எனவே அறம் கூறும் நூலின் மகிமையை அறிந்து வாழ்க்கை நெறி நன்னெறியாக அமைய வள்ளுவர் கூறிய வாழ்க்கையை நெறியை கடைப்பிடித்து உலகினை உயர்வடையச் செய்வோம்.

திருமதி மங்களா பாலச்சந்திரன்
ஆசிரியை

